**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**P204 இதழியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இதழியல் எதனை உள்ளடக்கியது?
2. இதழ்களின் முன்னோடி எது?
3. இந்தியச் செய்தித்தாள்களின் தந்தையாகக் கருதப்படுபவர் யார்?
4. ஜர்னல் (Journal) என்ற சொல்லிற்கு இலத்தின் மொழியில் பொருள் யாது?
5. Editorial – தமிழ் மொழியாக்கம் தருக.
6. இந்தியாவின் நான்காவது தூண் என அழைக்கப்படுவது எது?
7. இதழ்களைக் கட்டுப்படுத்த ஐந்தம்சத் திட்டங்களைக் கொண்டு வந்தவர் யார்?
8. சட்டமறுப்பு இயக்கத்தை ஒடுக்கக் கொண்டு வரப்பட்ட சட்டம் எது?
9. எல்லாச் சுதந்திரங்களின் இதயமாக விளங்குவது எது?
10. இதழியல் சுதந்திரத் தடை எத்தனை வகைப்படும்?
11. செய்தி – இணையான ஆங்கிலச் சொல் தருக.
12. தலையங்கத்தை அடையாளப் படுத்துவது எது?
13. செம்மையாக்கம் என்பதன் ஆங்கிலப்பதம் யாது?
14. கணையாழி எவ்வகை இதழ்?
15. தற்போது நாளிதழ்களில் அதிகமாக அச்சுக் கோக்கப் பயன்படுத்தப்படும் முறை எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. இதழியல் – பெயர்க்காரணம் தருக.
2. Free lancer என அழைக்கப்படுவர் யார்?
3. பதிப்புரிமைச் சட்டம் என்றால் என்ன?
4. இதழ் என்பதற்கான வின்ஸ்டன் சர்ச்சிலின் விளக்கம் யாது?
5. வாட்டர் கேட் ஊழல் என்றால் என்ன?
6. News – விரிவாக்கம் தருக.
7. உதவியாசிரியர்களாகக் கருதப்படுபவர்கள் எவர்?
8. தலையங்கம் – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இதழியல் வகைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இதழியலின் நடத்தை விதிகளும், சட்டங்களும் குறித்து விவரி

2. (அ) இதழியல் சுதந்திரம் என்பதைக் குறித்த அறிஞர்களின் விளக்கங்களைக் கட்டுரை வடிவில் தருக.

(அல்லது)

(ஆ) செய்தியாளரின் தகுதிகளும் பொறுப்புகளும் குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) செய்திகளின் பக்க அமைப்புக் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) திருத்தக் குறியீடுகளின் பிரிவுகளைக் குறித்துக் கட்டுரைக்க.

* * *